**வவுனியா நகரசபை**

**வவுனியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 27 மார்ச் 2019 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 யூன் 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா நகரசபையின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2012 வருடம் முதல் கணக்காய்வு வருடம் வரை குடியிருப்பு சிறுவர் பூங்கா வெளியார் நிறுவனமொன்றிற்கு குத்தகைக்கு வழங்கியதன் பேரில் கிடைக்க வேண்டிய ரூபா 125,000 வருமானம் கணக்கிற்கு கொண்டு வரப்படாமையினால் திரண்டநிதி கணக்குகளில் குறைத்து காட்டப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிக்குரிய குத்தகை வருமானம் வருமானச்செலவு கணக்கில் காட்டப்படவேண்டும் | இத்தொகையை விடுவிப்பு செய்ய கோரி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

#### 1.3.2 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 33,214,563 பெறுமதியான 02 கணக்கு விடயங்களுக்குரிய நிலையான சொத்து பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக உறுதி செய்ய முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | தளபாடம் மற்றும் பொருத்துக்கள் மற்றும் இயந்திரசாதனங்கள், உபகரணங்கள் ஆகியன இதுவரைகாலமும் இருப்புப் பதிவேட்டின் வடிவில் பெறுமதிகளின் அடிப்படையில் பராமரிக்கப்பட்டுவந்தது. தற்போது சொத்து முகாமைத்துவத்திற்கமைய அவை தனித்தனியான பதிவேடுகளாக பராமரிக்கப்படுகின்றது |

### 1.3.3 இணங்காமைகள்

--------------------

### 1.3.3.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **(அ) நகரசபைகள் கட்டளைச்சட்டம்** | | | |
| (i) பிரிவு 44(2) | நகர சபைகள் ஸ்தாபிக்கப்பட்டு 3 வருடங்களுக்குள் சபைகளின் வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பட்டியல்கள் அரச வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை | நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும். | வீதிகளுக்கான வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னைய காலங்களில் எடுக்கப்பட்டும் அது பூர்த்தியாகாத படியால் மீண்டும் புதிதாக இந்நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (ii) அத்தியாயம் III பிரிவு 54(2) | உரிய காலப்பகுதியில் அறவீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. | நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும். | உரிய காலப்பகுதியில் அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், ஏற்பட்ட நிலுவைகள் தொடர்பாக தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| **(ஆ) இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | | |
| **(i)** நிதி ஒழுங்குவிதி 751(2) | சபையிலுள்ள மின் இணைப்பு பொருட்களுக்கான பொருட்பதிவேடு தனியாக பேணப்பட்டு பதிவுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணங்களின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும். | பதிவேடு பேணப்படாமை கண்டறியப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இதற்கான முறையான பதிவேடு பேணப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |
| **(ii)** நிதி ஒழுங்குவிதி 571(2) மற்றும் (3) | கூட்டுமொத்தம் ரூபா 244,337 பெறுமதியான 09 காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை | நிதி பிரமாணங்களின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும். | இவ்வைப்புக்கள் உரியவர்களால் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்களுக்காக அறவிடப்பட்டு வைப்பிலிடப்பட்டுள்ளது. அக்கட்டடங்களுக்கான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | உரியநடவடிக்கை எடுக்கப்படும் வரை வருடாந்தம் 10 % தண்டமாக வைப்பிலிருந்து கழிக்கப்பட்டு சபை வருமானத்திற்கு மாற்றப்பட்டு வருகின்றது. |
| **(iii)** | நிதி ஒழுங்குவிதி 371(5) | முற்பணக்கணக்கில் நீண்ட காலமாக உள்ள ரூபா 142,733 தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதி பிரமாணங்களின் அறிவுறுத்தல்களுக்க மைய செயற்படல் வேண்டும். | முற்பணமீதியை சீராக்கல் செய்வதற்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| **(இ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டி கைநூல்** பிரிவு178(3) | திறமையான ஒப்பந்த வேலைகளை முன்னெடுத்திருக்கும் சமூகமட்ட அமைப்புக்கள், சனசமூக நிலையங்களின் பெயர்களைக் கொண்ட பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | பெறுகை வழிகாட்டி கைநூலுக்கமைய செயற்படல் வேண்டும். | மேற்படி பதிவேடு பேணப்படுவதற்கான நடவடிக்கை சனசமூக உத்தியோகத்தரின் உதவியுடன் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **(ஈ)** | திறைசேரியின் 28 நவம்பர் 2002 ஆம் திகதிய சுற்றறிக்கை இல IAI/2002/02 | கணினி மற்றும் அதன் உதிரிப்பாகங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்க மைய செயற்படல் வேண்டும். | கணினி மற்றும் உதிரிப்பாகத்திற்குரிய பதிவேடு பராமரிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது |

### 1.3.4 வரித்தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பெறுமதி சேர் வரி (VAT) தொடர்பான கொடுக்கல் வாங்கல்களின் மீதான பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவானது பெறுகை வழிகாட்டி நெறிகள்-2006 இன் 5:4:12 இன் பிரகாரம் பண்டங்கள் அல்லது கட்டுமான வேலைகள் மீதான பெறுமதி சேர் வரித்தொகையானது பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு அல்லது வழங்குனர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய கொடுப்பனவுகள் பற்றிய விபரங்கள் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான ஒரு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். 05 வேலை நடவடிக்கைகள் | பெறுமதி சேர் வரி மற்றும் பெறுகை வழிகாட்டி நெறிகள் அறிவுறுத்தல் களுக்கமைய செயற்பட வேண்டும். | குறித்த காலப்பகுதியில் VAT தொடர்பான அறிக்கைகள் தங்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன |

மேற்கொள்ளப்பட்ட போதிலும் ரூபா 2,741,838 பெறுமதியான சேர் பெறுமதி வரி தொடர்பான கொடுப்பனவுகள் தொடர்பில் நாளது வரைக்கும் கணக்காய்விற்கு அறியப்படுபத்தியிருக்கவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 71,516,844 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின்மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம்ரூபா 80,085,510 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டமதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழேதரப்பட்டுள்ளன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகள் | 23,512,046 | 24,788,149 | 23,383,989 | 41,245,333 | 23,262,046 | 29,895,123 | 26,189,258 | 42,649,494 |
| வாடகைகள் | 42,058,834 | 36,094,056 | 35,901,420 | 5,300,770 | 34,141,469 | 36,494,175 | 37,091,229 | 5,434,906 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,510,000 | 2,167,702 | 2,167,702 | -- | 2,515,000 | 1,946,555 | 1,946,555 | -- |
| ஏனைய வருமானம் | 56,331.000 | 54,783,351 | 63,185,799 | 36,594,039 | 126,804,000 | 110,948,701 | 126,874,659 | 28,191,591 |
| **மொத்தம்** | **68,137,211** | **117,833,258** | **124,638,910** | **83,140,142** | **186,722,515** | **179,284,554** | **192,101,701** | **76,275,991** |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்காமலும் மதீப்பீட்டை சரியான முறையில் திட்டமிட்டு நிகழ்ச்சிப்படுத்தாமையுமே பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 128,057தொடக்கம் ரூபா 6,157,415வரையான வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | பாதீடானது சரியான முறையில் தயாரிக்கப்பட வேண்டும். | குறித்த காலப்பகுதியில் சேகரிக்கப்பட்டுள்ளதுடன், புதிய பஸ்நிலைய இடமாற்றங்கள் காரணமாக திறந்தவெளிச்சந்தை, வாகனத்தரிப்பிடக் குத்தகை, பழைய பஸ்நிலையக் குத்தகைகள் காரணமாக சில வருமான இழப்புக்கள் ஏற்பட்டது. |

### 2.2.3 வீதவரிகள்

-------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) வீதங்கள் மற்றும் ஆதன வரி நிலுவைகளின் கூட்டு மொத்தம் ரூபா 41,245,333 இனை அறவிடுவதற்கு கடந்த 01 தொடக்கம் 05 வருடங்களாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டதுடன் 07 வருடங்களுக்கு மேலாக ஆதன வரி மீள்மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லையாதலால் ஆதன வரி வீதங்களின் அறவீடு மற்றும் நிலுவைகளின் சரியான தன்மையினைத் திருப்திகரமாக ஏற்று உறுதிப்படுத்த முடியவில்லை. | வீதங்கள் மற்றும் ஆதன வரி நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் மற்றும் மீள்மதிப்பீடும் மேற்கொள்ளப்படல் வேண்டும். | வீதங்கள் மற்றும் ஆதனவரி நிலுவைகளை அறவிடுவதற்கு நடுக்கட்டு உத்தியோகத்தருடாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மீள்மதிப்பீடு செய்வதற்கு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்துடன், பலமுறை தொடர்பு கொண்டும், உரிய ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டும், இற்றைவரை ஆதனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்படவில்லை. |
| (ஆ) அறவிடப்பட வேண்டிய களியாட்ட வரி ரூபா 1,090,745 இனை கடந்த 04 ஆண்டுகளாக அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | களியாட்ட வரி அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | ரூபா 1,090,745 ஆனது கடந்த காலங்களில் தொடர்ச்சியான நிலுவையாக காட்டப்பட்டு வந்துள்ளதுடன், இதனை பதிவழிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, உரிய ஆவணங்களுடன் கௌரவ ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

### 2.2.4 வாடகைகள்

--------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) அறவிடப்பட வேண்டிய வாடகைகள் ரூபா 2,718,408 தொடர்பாக சபையினால் கடந்த 01 தொடக்கம் 05 ஆண்டுகளாக அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையின் எல்லைக்குட்பட்ட அனைத்து கடைகளுக்குமான கடை வாடகை அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் | அறவிடப்பட வேண்டிய வாடகைகள், குத்தகைகளின் நிலுவைகளில் 2018.12.31 வரை ரூபா 5,300,770 இல் 2019 ஏப்பிரல் 30 வரை ரூபா 2,582,362.45 அறவிடப்பட்டுள்ளது என்பதுடன், மிகுதி நிலுவை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது |
| (ஆ) சபைக்கு சொந்தமான வாடகைக்கு விடப்பட்டிருந்த 58 கடைகள் தொடர்பில் கடந்த 01 தொடக்கம் 47 ஆண்டுகளாக அவற்றுக்கான | வாடகை ஒப்பந்தம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் | ஒப்பந்தம் செய்யப்படாத கடைகளில் கூடுதலானவை கைமாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதாவது நகரசபைக்கு அறியத்தரப்படாது கடைகள் விற்கப்பட்டோ |

| | | | |
|---|---|---|---|
| | வாடகை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | அல்லது வாடகைக்கோ விடப்பட்டுள்ளது. அத்துடன் சிலர் வெளிநாடு சென்றுள்ளதாகவும் அறியக்கூடியதாகவுள்ளது. இதனால் வாடகை ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் எமது அனுமதியின்றியும் எமக்கு அறியத்தரப்படாமலும் மேற்கொள்ளப்பட்ட உரிமை மாற்றம் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதனை அறியத்தருகின்றேன். |
| **(இ)** | வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த சபைக்கு சொந்தமான 315 கடைகள் மற்றும் காணிகளுக்கான வாடகைக்கு வழங்கப்பட்ட வாடகை ஒப்பந்த காலம் நிறைவடைந்து 01 தொடக்கம் 33 ஆண்டுகள் வரையான காலங்கள் கடந்த நிலையிலும் அவை தொடர்பில் மீள ஒப்பந்தம் செய்யப்பட்டிராது பயன்பாட்டிற்கு விடப்பட்டிருந்தன. | மீள ஒப்பந்தம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் | ஒப்பந்தம் செய்யப்படாத கடைகள் தொடர்பாக அவர்களுக்கு அறிவித்தல் வழங்கி ஒப்பந்தங்களை புதுப்பித்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது |

**2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

**(அ) நீதிமன்ற தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 18,566,339 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் பெறப்பட வேண்டியிருந்தன. | உரிய காலத்தில் நீதிமன்ற தண்டப்பணம் பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | 31.12.2018 வரையான நீதிமன்றத் தண்டப்பணங்கள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கமைவாக, இதுவரை ரூபா 9,540,600 கிடைக்கப்பெற்றுள்ளது. எஞ்சிய தொகையினையும் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**(ஆ) முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 18,027,700 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | உரிய காலத்தில் முத்திரைக் கட்டணங்களை பெற நடவடிக்கை எடுக்கப்படல்வேண்டும் | முத்திரைத்தீர்வை தொடர்பான விபரங்களும் தற்போது உறுதிப்படுத்தப்பட்டு கிடைக்கப்பெற்றுள்ளது இதற்கான தொகையினைப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன். |

### 2.2.6 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நகரசபைகள் கட்டளைச்சட்டம் ஏற்பாடுகளின் பிரகாரம், பொறுப்புவாய்ந்த நபர்களுக்கெதிராக மீளாய்வாண்டில் என்னால் ரூபா 15,815 பெறுமதியான மிகைக்கட்டணங்கள் விதிக்கப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டுகளில் விதிக்கப்பட்ட மிகைக்கட்டணங்கள் உள்ளடங்கலாக ரூபா 957,768 தொகை 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொடர்ந்தும் அறவிடப்படப்பட வேண்டியதாகக் காணப்படுகின்றது. | உரிய காலத்தில் மிகைக்கட்டணங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கைஎடுக்கப்படல் வேண்டும் | மேற்படி மீதி தொடர்பாக குழு அமைத்து, அதனூடாக மேலதிக நடவடிக்கை மேற்கொண்டு தங்களுக்கு அறிக்கை இடப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச்சுகாதாரம், பொதுப் பயன்பாடு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 வரையிலும் 21 விடயங்களுக்கு மாத்திரம் உபவிதிகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. | நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 157 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உப விதிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | நகரசபை கட்டளைச்சட்டத்தின் 157 பிரிவின் பிரகாரம் ஏனைய 10 விடயங்களையும் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதனை அறியத்தருகின்றேன். |

### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல் படுத்தப்பட்டிருக்க வேண்டிய 10 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | சபையினால் செயல் படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும் | வருடாந்த செயல்திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

### (இ) செயற்பாடுகளின் செயலாற்றலில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 13,385,874 பெறுமதியான 08 ஒப்பந்த வேலைகள் மீளாய்வாண்டில் முடிவுறுத்தப்பட்டிருக்காமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு அறியக்கொடுக்கப்பட்டிருக்கவில்லை | வேலைகள் திட்டமிடப் பட்டதற்கமைய உரிய காலத்தில் முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படல வேண்டும் | மேற்படி வேலைகளில் தாமதத்திற்கான காரணம் ஆராயப்பட்டு நகரசபை மாதாந்த கூட்டத்தில் இதற்கான காலநீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. |

### (ஈ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | குப்பைகளை அகற்றுவதற்காக காணப்படுகின்ற இடங்களிற்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டும். | இவ் இடத்தினை மாற்றக் கூடிய சூழ்நிலை காணப்படுகின்றமையால் அனுமதிப்பத்திரம் பெறுவது தொடர்பான நடவடிக்கையில் கால தாமதம் காணப்படுகின்றது. |
| (ii) | சுகாதார தொழிலாளர்கள் வருடாந்தம் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பவில்லை. | சுகாதார தொழிலாளர்கள் வருடாந்தம் மருத்துவ பரிசோதனைக்குட்படுத்த வேண்டும். | மருத்துவ பரிசோதனை நடாத்துவதற்கு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. |
| (iii) | குப்பைகள் வெவ்வேறாக வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்படுவதில்லை. | குப்பைகள் வகைப்படுத்தி சேகரிக்கப்படல் வேண்டும். | குப்பைகள் வெவ்வேறாக வகைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| **(iv)** | சபையின் குப்பைகளை கொட்டும் இடங்களிற்கு கொண்டுவரப்படுகின்ற குப்பைகளை வகைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படவில்லை. | குப்பைகளை வகைப்படுத்துவதற்துவதற்கான வேலைத்திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். | இவ்வேலைத்திட்டமானது நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்படுகின்றது என்பதனை அறியத்தருகின்றேன் |
| **(v)** | கழிவு முகாமைத்துவத்திற்குத் தேவையான தகவல்கள் மற்றும் தரவு முறைமையொன்று பேணப்படவில்லை. | கழிவு முகாமைத்துவம் தொடர்பில் தரவுகள் மற்றம் தகவல்கள் முறைப்படுத்தப்பட வேண்டும். | இனிவருங்காலங்களில் இவ்விடயம் கருத்திற்கொள்ளப்பட்டு நிவர்த்தி செய்யப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |
| **(vi)** | திண்மக் கழிவுகள் மீள்சுழற்சிக்குட்படுத்தாது காணப்படுவதுடன் சூழல் பாதிப்படையக்கூடியவாறு தீ மூட்டி எரிக்கப்படுகின்றது. | திண்மக்கழிவுகள் மீள் சுழற்சிக்குட்படுத்த வேண்டும். | இவை தொடர்பாக சபை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | சபையால் மீளாய்வாண்டுக்கான K படிவம் கூட்டுமொத்தம் ரூபா 122,969 செலவளிக்கப்பட்டிருந்த போதும் குறித்த படிவங்களை விநியோகிக்கும் உத்தியோத்தர்கள் வினைத்திறனாக செயற்படாததன் காரணமாக 1417 படிவங்கள் விநியோகிக்கப்படாமல் சபையில் தேங்கி காணப்பட்டது இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. | படிவங்களை முழுமையாக விநியோகிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும். | ஆதன உரிமையாளர்கள் மற்றும் ஆதனங்களின் தன்மைகளில் பெரியளவில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது.<br>இதன்காரணமாகவே K படிவங்கள் விநியோகிக்கும் போது உரிய ஆதனங்களின் மாற்றம் காரணமாக உரியவர்களிடம் ஒப்படைக்கவோ அதனை இனங்காணவோ முடியாதுள்ளது. |
| **(ஆ)** | நன்கொடையாகப் பெற்ற 02 வாகனங்கள் பதிவுப் புத்தகம் அற்ற நிலையில் காணப்படுகின்றது. | சொத்துகள் தொடர்பான உரிமையை உறுதிப்படுத்தல் வேண்டும். | இரண்டு வாகனங்களும் பயன்படுத்தமுடியாத காரணத்தால் தொழில் பயிற்சிநிலையங்களுக்கு வழங்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| **(இ)** | நூலகக் கட்டட நிதி ரூபா. 745,225 கடந்த 04 ஆண்டுகளுக்கு மேலாக உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிராது பொது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. | உரிய விதிகளின் அறிவுறுத்தல்களுக்க மைய செயற்பட வேண்டும். | இவ் 2 வைப்புக்களும் நிலையான வட்டிதரும் வைப்புக்களாக பேணப்பட்டு வருவதுடன் தேவை ஏற்படும் போது பயன்படுத்தப்படும் என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சபைக்கு சொந்தமான 7 பேர்ச் விஸ்தீரணம் உடைய காணியை தனிநபர் தன்னிச்சையான முறையில் ஆக்கிரமித்து தொழில்நிலையம் நடாத்தி வருகின்றார் இது தொடர்பாக நகரசபை கட்டளைச்சட்டம் 255 இன் படி சட்ட நடவடிக்கை எடுக்க சபையால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. | சொத்துகள் தொடர்பான உரிமை உறுதிப்படுத்த வேண்டும். | தற்போது அடையாளம் காணப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது, இது தொடர்பான அறிக்கை பெறப்படடு தங்களுக்கு அறியத்தருகின்றேன். |
| (உ) | சபைக்கு சொந்தமான 02 கடை மற்றும் காணியை வணிக நிறுவனம் ஒன்று தன்னிச்சையான முறையில் ஆக்கிரமித்து தொழில்நிலையம் நடாத்தி வருகின்றது இது தொடர்பாக நகரசபை கட்டளைச்சட்டம் 255 இன் படி சட்ட நடவடிக்கை எடுக்க சபையால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. | பாவனைக்கு ஏற்ற வகையில் திருத்தி பாவனையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | தற்போது அடையாளம் காணப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது, இது தொடர்பான அறிக்கை தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **பதவி வெற்றிடங்கள்** | | |
| | 2018 திசம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் 30 ஆளணி வெற்றிடங்கள் நிரப்பபட்டிருக்கவில்லை | வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது |
| **(ஆ)** | **ஊழியர் கடன்கள்** | | |
| (i) | சபையிலிருந்து கடந்த வருடங்களில் இடமாற்றம் பெற்றுச்சென்ற அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன் நிலுவை ரூபா 246,260 வினை அறவீடு செய்வதற்கு சட்டரீதியானதும் ஆக்கபூர்வமானதுமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | ஊழியர் கடன் நிலுவையை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | அலுவலர்களிடமிருந்து அறவிடவேண்டிய பதவியினர் கடன் நிலுவை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |
| (ii) | சபையினால் பதவியில் இருந்து பதவிநீக்கப்பட்ட, இளைப்பாறிய மற்றும் இறந்த 03 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன் நிலுவை ரூபா 27,795 அறவீடு செய்வதற்கு சட்டரீதியானதும் ஆக்கபூர்வமானதுமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் நிலுவை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | நிலுவையினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது |
| **(இ)** | **ஊழியர் பிணைகள்** | | |
| | 02 உத்தியோகத்தர்கள் நீண்ட காலமாக சபையிலிருந்து விலகிய போதும் ஊழியர் பிணை வைப்புக்களில் | பிணைபணம் மீளஅளிப்பதற்கு | இது தொடர்பாக உரியநடவடிக்கை |

| | | |
|---|---|---|
| உள்ளடக்கப்பட்ட ரூபா 14,552 பிணைகளினை மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | எடுக்கப்பட்டு தங்களுக்கு அறிக்கையிடப்படும் என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன் |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | கடந்த 08 வருடங்களுக்கு மேலாக சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆதனங்களுக்கு ஆதன மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு ஆதனவரியினை அறவிடப்பட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களை மீள்மதிப்பீடு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நகரசபைக்குரிய ஆதனங்களை மீள்மதிப்பீடு செய்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்துடன், பலமுறை தொடர்பு கொண்டும், உரிய ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டும், இற்றைவரை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் எமது ஆதனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றேன் |
| **(ஆ)** | சபையால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டவர்களில் 219 தரப்பினர்களுக்கு வாழ்வியல் குடிபுகுதல் சான்றிதழ் நாளதுவரை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | உரிய விதிகளின் அறிவுறுத்தல்களுக் கமைய செயற்படல் வேண்டும். | கட்டிடம் உரிய முறையில் அனுமதி பெறப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டு, குடிபுகு சான்றிதழ் கோரப்பட்டவர்களுக்கு, எம்மால் குடிபுகு சான்றிதழ் வழங்கப்பட்டு வருகின்றது என்பதுடன், ஏனையவர்கள் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது |

**3.5 சொத்து முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், சபைக்குரிய 50 காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேடும் சபையினால் முறையாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறே கிரமமாக காணி மற்றும் கட்டிடங்களை மெய்மையாய்வு செய்யப்பட்டு சபைக்குச் சொந்தமான அவ்வாறான சொத்துக்கள் தொடர்பிலான உரிமை உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காணி மற்றும் கட்டடங்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டு சபைக்குச் சொந்தமான அவ்வாறான சொத்துக்கள் தொடர்பிலான உரிமை உறுதிப்படுத்தல் வேண்டும் | சபையின் சொத்துக்களில் தளபாடங்களும் பொருத்திகள், பொறி இயந்திரங்கள்,மோட்டார் வாகனங்கள் என்பன முழுமையாக விலைமதிப்பீடுகள் செய்யப்பட்டு காணி,கட்டடங்கள் என்பன முழுமையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன், காணிகளை மதிப்பீடு செய்வதற்கு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. கட்டடங்களை மதிப்பீடு செய்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது |

### 3.5.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் 10 வாகனங்கள் நீண்டகாலமாக பாவனையில் ஈடுபடுத்தப்படாமல் இருப்பதுடன் இது தொடர்பாக உரிய நடைமுறையை பின்பற்றி பாவனையில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ நாளதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பாவனைக்கு ஏற்ற வகையில் திருத்தி பாவனையில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | சபை அனுமதி பெறப்பட்டு பின் அமைச்சின் செயலாளரின் அனுமதியின் பின் விற்பனை செய்யப்படும். |

### 3.5.3 விளைவற்ற சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | சபையின் களஞ்சியத்தில் ரூபா 1,752,625 பெறுமதியான பொருட்கள் 04 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தாமல் காணப்படுகின்றது. | பாவனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தற்போது பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது |
| **(ஆ)** | திண்ம கழிவுகளில் இருந்து இயற்கை உரம் தயாரிப்பதற்கென ரூபா 4,455,800 பெறுமதியில் 2017 திசெம்பர் 13 திகதி கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்கள் நாளதுவரை பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றது. | பாவனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தற்போது உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. |
| **(இ)** | சபையினால் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் குருமன்காடு முதியோர் பூங்கா கூட்டுமொத்தம் ரூபா 2,534,837 செலவில் 18 யூன் 2018 பூரத்தி செய்யப்பட்டிருந்தும் நாளதுவரை பாவனையிலீடு படுத்தப்படாமலுள்ளது | பாவனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இதற்கான நிதி ஒதுக்கீடுகள் மட்டுப்படுத்தப்பட்டு காணப்படுவதால் இவ் வேலைகளுக்கான Land Scaping, உட்புற அழகுபடுத்தல் வேலைகள் மற்றும் இருக்கைகள் என அமைக்கப்படல் வேண்டும். எனினும் தற்போது இது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பாவனைக்கு விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **(ஈ)** | மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வவுனியா குள சுற்றுலா மையம் ரூபா 4,521,119 செலவில் 12 திசெம்பர் 2018 பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் நாளதுவரை பாவனையிலீடுபடுத்தப்படாமலுள்ளது. | பாவனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மேற்படி வேலைத்திட்டமானது மட்டுப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு காரணமாக முழுமையாக பூர்த்தியாக்கப்படாமல் பகுதியளவிலேயே பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. மிகுதி வேலையின் ஓர் பகுதி செய்வதற்கு நகரசபை பாதீடு 2019 இல் தொடர் இலக்கம் 33 இல் 3.0 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே இவ் |

| | | | |
|---|---|---|---|
| | | | வேலைகள் முடிவடைந்து திட்டம் நிறைவடையும் வரை மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே பயன்பாட்டுக்கு விடப்படுகின்றது. |
| **(உ)** | சபையினால் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் சபையால் மேற்கொள்ளப்பட்ட இலத்திரனியல் நூலகம் ரூபா 895,453 செலவில் 18 யூன் 2018 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் நாளதுவரை பாவனையிலீடு படுத்தப்படாமலுள்ளது. | பாவனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இலத்திரனியல் நூலகம் ஆளணியின்மையால், முழுமையாக பாவனையிலீடுபடுத்த முடியாதுள்ளது என்பதனை தெரிவித்து கொள்கின்றேன். |

### 3.5.4 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நன்கொடையாகப் பெறப்பட்டிருந்த 12 வாகனங்கள் சபைக்கு உரித்தானதாக்கப்பட்டிருக் கவில்லை. | வாகனங்களுக்கு உரிமைமாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் | 12 வாகனங்களுக்கு உரிமைமாற்றத்திற்கு மோட்டார் வாகனபோக்குவரத்து திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது |

### 3.5.5 வருடாந்த கணிப்பீட்டுச்சபை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டு வருடாந்த கணிப்பீட்டுச் சபையால் பாவனையிலீடுபடுத்த முடியாது என குறிப்பிட்ட 119 பொருட்கள் தொடர்பாக 438 ஆம் இலக்க 2009 நவம்பர் 13 ஆம் திகதிய பொது நிதி சுற்றறிக்கைக்கு அமைய நாளதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக் கமைய செயற்பட வேண்டும் | 2018 கணிப்பீட்டுச் சபையால் பாவனையிலீடுபடுத்த முடியாது எனகுறிப்பிட்ட பொருட்கள் தொடர்பாக முடிவுறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுகின்றது. |

### 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபைக்கு சொந்தமான வாகனங்களுக்கு வரி அனுமதிபத்திரம் பெறும் போது 05 வாகனங்களுக்கான தண்டப்பணமாக ரூபா 43,955 சபையால் செலுத்தப்பட்டிருந்தது. | உரிய விதிகளின் அறிவுறுத்தல்களுககு அமைய செயற்பட வேண்டும். | சபையின் பாவனையில் இருந்துவந்த 5 வாகனங்களும் உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களின் பெயரில் காணப்பட்டபோதும் அவைகளுக்கான பதிவுப்புத்தகம் இல்லாமையாலும் தொடர்ந்து பாவனையில்லாத காரணத்தால் உரிய காலப்பகுதியில் வரி அனுமதிப் பத்திரம் பெறப்படவில்லை. |

### 3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு 2009 ஆண்டு பெறப்பட்ட ரூபா 08 மில்லியன் பெறுதியான பெக்கோ இயந்திரம் 23 மார்ச் 2019 எரியூட்டப்பட்டு முற்றாக அழிவடைந்துள்ளது. | உரிய விதிகளின் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்பட வேண்டும் | சபையின் பாவனையில் இருந்த பெக்கோ வாகனம் சபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த போது தீடீரென தீப்பற்றி கொண்ட நிலையில் சபைக்குரிய தீயனைப்பு பிரிவினரால் பகுதியளவில் எரிந்த நிலையில் தீ அணைக்கப்பட்டுள்ளது, தீ அனர்த்தம் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் உடன் எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.8 பெறுகை

#### 3.8.1 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதி, திட்டமிடல் அமைச்சினால் 2012 ஜனவரி 05 திகதியிடப்பட்ட அரச நிதி சுற்றறிக்கை 01/2012 முரணாக மீளாய்வாண்டில் | | |

| | | | |
|---|---|---|---|
| | சபையினால் கூட்டுமொத்தம் ரூபா 27,504,037 ஆன 18 ஒப்பந்த வேலைகள் சனசமூக நிலையங்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு செய்யப்பட்டிருந்தது. இவை தொடர்பான அவதானிப்புகள் வருமாறு. | | |
| (i) | சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் படி திணைக்கள தலைவர் மற்றும் இரண்டு பிரதிநிதிகளுடன் மூன்று பேர் கொண்ட குழுவொன்று 3.2 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட தகைமைகள் பரிசோதிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்பட வேண்டும் | எதிர்காலத்தில் மேற்படி தெரிவு செய்யப்பட்ட சனசமூக நிலையத்தினை திணைக்களத்தலைவர் மற்றும் இரண்டு பிரதிநிதி அடங்கிய கேள்விக்குழுவுக்கு சமர்ப்பித்து அக்குழுவின் சிபார்சும் அனுமதியும் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | சுற்றறிக்கையின் 3.2(iv) ஆம் பிரிவிற்கு முரணாக குறித்த ஒப்பந்த வேலைகள் சனசமூக நிலையங்களால் செய்யப்படாமல் வேறு தனியார் ஒப்பந்தக்காரர்களுக்கு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டு 5% தரகு பணத்தை மாத்திரமே சனசமூக நிலையங்கள் பெற்றுக்கொண்டிருந்தது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும் | எம்மால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒப்பந்தம், நடைமுறைப்படுத்தல், கொடுப்பனவு சிட்டை சமர்ப்பித்தல், வேலை முடிவடைந்த கடிதம் போன்ற ஒப்பந்த வேலை தொடர்பான அனைத்து நடவடிக்கையும் ஒப்பந்தம் செய்யப்பட்ட சனசமூக நிலையத்துடனே மேற்கொள்ளப்படுகின்றது. |
| (iii) | சுற்றறிக்கையின் 3.2(iv) ஆம் பிரிவிற்கு அமைய துணை ஒப்பந்தங்களில் ஈடுபட்ட அவ்வாறான சனசமூக நிலையங்களை கறுப்பு பட்டியலிடப்பட சபையானது நாளதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்பட வேண்டும் | சனசமூக நிலையங்களில் துணை ஒப்பந்தங்கள் செய்தவை தொடர்பான எவ்விதமான முறைப்பாடுகளோ, சான்றுப்படுத்தல்களோ நகரசபைக்கு கிடைக்கப்பெறவில்லை |
| **(ஆ)** | மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 6,977,383 ஆன 04 ஒப்பந்த வேலைகள் இக்கணக்காய்வு திகதி வரை முடிவுறுத்தப்படாமல் காணப்படுகின்றது. | ஒப்பந்த வேலைகள் உரிய காலப்பகுதியில் முடிவுறுத்தப்படல் வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பாதீட்டுச் செலவினத்திற்கும் உண்மை செலவினத்திற்கும் இடையில் ரூபா 27,033 தொடக்கம் ரூபா 17,301,230 வரையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன இது பாதீடானது முகாமையின் ஓர் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாததனை காட்டுகின்றது. | பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் சரியான ஒப்பிடுகையின் மூலம் பாதீடு தயாரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. |